**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 05–ஆம் நாள் வியாழக்கிழமை**

**இடைநிலை மனு எண்.7/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.42/2023**

1. K. நந்தகோபால்
2. சௌந்தரராஜன்
3. திலகமணி
4. ராதாகிருஷ்ணன்
5. விஜயகுமார்

... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சுப்பிரமணியன்
2. உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், திருப்பூர்.
3. வட்டாட்சியர் அவர்கள், பல்லடம்
4. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, திருப்பூர்
5. சி.சி.சரவணபவன்

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இறுதியாக 25.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.விமலாசௌந்தர்ராஜ், பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ராஜேஷ்., பி.லிட்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் வழக்கறிஞர் திருமதி.டி.ரேணுகாதேவி., எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 4, 5 பிரதிவாதிகளை தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், இதுநாள் வரை

இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் கண்டுள்ள விபரப்படி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களின் இயற்கை அம்சங்களை குறித்து ஒரு அறிக்கையை வரைபடத்துடன் தாக்கல் செய்ய வேண்டுமென்று உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அருள்மிகு பாலமலை ரங்கநாதபெருமாள் திருக்கோவில், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காட்டூர் கிராமம், கெங்கநாயக்கன் பாளையம், க.ச.330/1ல் பு.ஹெக்.ஏர்.0.17.5 பு.ஏ.0.43 செண்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோவில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ள கோவில் ஆகும். க.ச.330/1ல் அமைந்துள்ள இரங்கநாத பெருமாள் திருக்கோவிலுக்கு மேற்குபுறமாக 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியானவர் கடந்த 07.02.2022 தேதியில் பல்லடம் சார்பதிவக கிரைய ஆவண எண் 2283/2022ன் படி க.ச.331/2ல் பு.ஏ.1.50 ½ பூமியை கிரையம் பெற்றுள்ளார். தொடக்கத்தில் பழனி வண்ணான் என்கின்ற பழனிச்சாமி மற்றும் நாச்சிவண்ணான், இவர்களின் தாயார் எல்லம்மாள் ஆகிய மூவரும் சேர்ந்து க.ச.331 நெ காலையில் அமைந்துள்ள பூமிகளை பொறுத்து ஒரு பாக சாசனத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். ஷை பாக சானமானது பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பாக சாசன எண் 1723/1973 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாக சாசனத்தின்படி பழனி வண்ணானுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை பழனி

வண்ணானின் வாரிசுகளிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி விலைக்கு வாங்கியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் பூமிக்கு வடபுறமாக க.ச.331/1ல் நாச்சி என்பவருக்கு சொந்தமாக பூமி அமைந்துள்ளது. அதனை ஒட்டி வடபுறமாக கிழமேலாக மண் ரோடு செல்கிறது. காலம் காலமாக பழனி வண்ணான் என்பவர் க.ச.331/1 நெ காலையை ஒட்டி வடபுறமாக அமைந்துள்ள கிழமேல் மண் ரோட்டிலிருந்து நேரடியாக தெற்கு முகமாக நாச்சி பூமியின் வழியாக பொதுவாகவும், ஏகமாகவும் வந்து போக்குவரத்து செய்து க.ச.331/2ல் உள்ள அவரது பூமியை அடைந்து வந்துள்ளார். வேறு வழித்தடம் எதனையும் பழனி வண்ணான் என்பவர் பயன்படுத்தியது இல்லை. தற்பொழுது பழனி வண்ணான் என்பவரின் வாரிசுகளிடமிருந்து காட்டூர் கிராமம் க.ச.331/2ல் பு.ஏ.1.50 ½ ஐ கிரையம் பெற்ற 1ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி க.ச.330/1ல் பு.ஹெக்.0.17.5 (0.43 செண்ட்) பரப்பளவில் அமைந்துள்ள அருள்மிகு பாலமலை ரங்கசாமி கோவிலினுடைய இடத்திற்குள் கிழமேல் மண் ரோட்டிலிருந்து தெற்கு முகமாக நுழைந்து மேற்காக திரும்பி அவரது பூமியை அடையும் வண்ணம் வழித்தடமாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளார். மேலும் அவ்வாறு பயன்படுத்துவதற்கு ஏதுவாக கம்பிவேலியும், வாயிற்கதவும் அமைத்துள்ளார். மனுதாரர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் முயன்றும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செயலை தடுத்து நிறுத்த முடியவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அத்துமீறி கோவிலுக்கு சொந்தமான தாவா சொத்திற்குள் நுழைவதையும், அவரது பூமிக்கு செல்லும் தடமாக கோவில் நிலத்தை பயன்படுத்துவதை தடுக்கும் பொருட்டும், மிகுந்த சிரமத்தின்பேரில் நாங்கள் கோவில் நிலத்தை ஒட்டி தென்வடலாக கம்பிவேலி அமைத்துவிட்டனர். மேற்படி கம்பிவேலி அமைத்தலின் மூலமாக 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைவதையும், தடமாக பயன்படுத்துவதையும் தற்காலிகமாக தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

ii) 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் சொத்தை அடைவதற்கு தாவா சொத்தான கோவில் நிலத்திற்குள் புகுந்து அவரது சொத்தை அடைவதை தவிர வேறு வழி இல்லை என்றும், மேற்படி கோவில் நிலத்தை பயன்படுத்த வசதியுரிமை சட்டத்தின்படி மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது என்றும் தாக்கல் செய்துள்ளார்கள். ஆனால் உண்மையில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள தாவா சொத்தினுடைய மேற்கு புறத்தில் மேற்கு பார்த்து ஒரு இரும்பு கேட் வைத்து வழி விட்டுள்ளார். மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சொத்திற்கு மேற்கு பக்கமாக தென்வடல் மண் ரோடு உள்ளது. அந்த தென்வடல் மண் ரோட்டிலிருந்தும் பிரதிவாதியானவர் அவரது சொத்தினை அடைந்து கொள்ள முடியும். மேற்படி விபரங்களை மறைத்து 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து 10.02.2023 தேதியில் ஓ.மு.0739/2023/அ3 என்ற எண்ணில் ஒரு உத்தரவினை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெற்றுள்ளார். மேற்படி உத்தரவினை வேறு ஒரு வழித்தடம் இருப்பதை மறைத்து 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெற்றுள்ளார். எனவே, மேற்படி உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே, நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து நில அளவையர் உதவியுடன் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமென்பதே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் தாவா சொத்து மற்றும் எதிர்மனுதாரர் சொத்தை நீதிமன்ற ஆணையர் உதவியுடன் பார்வையிட கோரி தாக்கல் செய்துள்ள இந்த

மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் தாவா சொத்தானது இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான பூமியாகும். மேலும் இந்து சமய அறநிலையதுறைக்கு சொந்தமான தாவா சொத்தை பொருத்து இந்து சமய அறநிலையதுறை ஆணையர் மற்றும் அதன் உள்ளார்ந்த அதிகாரிகளே வழக்கு தொடர்வதற்கான அதிகாரம் உள்ளவர்கள் எனவும், மனுதாரருக்கு இந்து சமய அறநிலையதுறை சொத்துக்களுக்கு வழக்கு தொடர்வதற்கான எவ்வித அருகதையும் மனுதாரர்களுக்கு கிடையாது. இந்து சமய அறநிலையதுறைக்கு சொந்தமான தாவா சொத்துக்கள் மற்றும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே வருவாய் அதிகாரியான 3–ஆம் பிரதிவாதி முழுமையான விசாரணை மேற்கொண்டு கடந்த 10–02–2023–ஆம் தேதியன்று ஒ.மு.0739/2023/அ3 என்ற எண்ணில் ஏற்கனவே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை மறைத்து இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இந்து சமய அறநிலையதுறைக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கள் மற்றும் எதிர்மனுதாரரின் சொத்துக்களை குறித்து வருவாய் அதிகாரிகள் மற்றும் இந்து சமய அறநிலையதுறையின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து அது WP.No.10220/2024 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 17.03.2025ம் தேதியன்று இந்த தாவா மற்றும் எதிர்கோருரிமை மனு ஆகிய இரண்டையும் விசாரிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை தெரிந்து கொண்ட மனுதாரர்கள் இந்த தாவாவை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள தாவாவானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். இந்த தாவாவிற்கு ஆதாரங்களை திரட்டுவதற்காக தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படி

நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்பதே 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கமாகும்.

**3) 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:—**

மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை அவர்களே நிரூபணம் செய்ய வேண்டும். மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதிலிருந்து ஓ.மு.0739/2023/அ3 என்ற நடைமுறைகள் பற்றி அவர்களுக்கு தெரிந்துள்ளது என்பது தெரிகின்றது. மேற்படி உத்தரவிற்கு எதிராக மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்வதற்கான வழிகள் உள்ளது. மேற்படி மேல்முறையீடு செய்ததாக மனுதாரர்கள் எதையும் தெரிவிக்கவில்லை. இதன் மூலம் காலதாமதமதம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரிகின்றது. மனுதாரர்கள் நாச்சி மற்றும் பழனிவண்ணான் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. மேற்படியார்களை இந்த வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவினை அனுமதிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதே 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கமாகும்.

4) 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால், அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவிடப்பட்டுள்ளார்கள்.

5) மனுதாரர்கள் மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**7. தீர்வு:–**

இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கின் ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கு எண்.42/2023 வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். இடைநிலை மனு எண்.7/2024 என்ற மனுவினை நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களின் இயற்கை அம்சங்களை குறித்து ஒரு அறிக்கையை வரைபடத்துடன் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

8) கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 2022ம் ஆண்டில் காட்டூர் கிராமம் க.ச.331/2 காலையில் 1.50 ½ ஏக்கர் பூமியை கிரையம் பெற்றுள்ளார்கள். மேற்படி, சொத்தினை 1ம் எதிர்மனுதாரருக்கு விற்ற நபர்கள் மேற்படி பூமிக்கு க.ச.331/1 காலையை ஒட்டி வடபுறமாக அமைந்துள்ள கிழமேல் மண்ரோட்டிலிருந்து நேரடியாக தெற்குமுகமாக வந்து அவர்களது பூமிக்கு சென்று வந்தார்கள். ஆனால், 1ம் எதிர்மனுதாரர் சொத்தினை வாங்கிய பின்னர் அந்த சொத்திற்கு அருகிலுள்ள க.ச.330/1 காலை பூமியான அருள்மிகு பாலமலை ரங்கசாமி கோவிலுனுடைய இடத்தில் கிழமேல் மண்ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி நுழைந்து மேற்காக

திரும்பி அவரது பூமியை அடையும் வண்ணம் பயன்படுத்த ஆரம்பித்தார். மனுதாரர்கள் தடுத்த பின்னர் அரசு அதிகாரிகளிடம் பொய்யான விவரங்களை அளித்து ஓ.மு.0739/2023/அ3 என்ற உத்தரவினை கடந்த 10.02.2023 தேதியில் பெற்றுள்ளார். மேற்படி, தடங்கள் குறித்தும், மேற்படி சொத்துக்களின் இயற்கை அம்சங்கள் குறித்தும் நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும். எனவே, இந்த மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

9) கற்றறிந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் தங்களது வாதத்தில், தாவா சொத்தானது இந்து சமய அறநிலையதுறைக்கு சொந்தமான சொத்தாகும். மேற்படி சொத்து சம்பந்தமாக இந்துசமய அறநிலையதுறை அதிகாரிகள் அல்லது கோவில் நிர்வாகம் தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும். மேலும், அரசு அதிகாரியான 3ம் எதிர்மனுதாரர் கள ஆய்வு செய்து முழுமையான விசாரணை மேற்கொண்டு கடந்த 10.02.2023 தேதியில் ஓ.மு.0739/2023/அ3 என்ற உத்தரவினை பிறப்பித்துள்ளதை மறைத்து மனுதாரர்கள் இந்த அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தான் தான் தாக்கல் செய்யமுடியும். எனவே, அவர்களது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மனுதாரர்கள் அசல் வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கிற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வது அவசியமற்ற ஒன்றாகும். வாதி, தனது வழக்கினை தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக தான் நிரூபணம் செய்யமுடியும். நீதிமன்றம் ஆணையரை நியமனம் செய்வது தரப்பினர்கள் ஆதாரங்களை சேகரிப்பதற்கு உதவுவதாக இருக்ககூடாது. எனவே, இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வது அவசியமற்ற ஒன்றாகும். இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

10) வழக்கின் ஆவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், 1ம் எதிர்மனுதாரர் க.ச.331/2 காலையில் 1.50 ½ ஏக்கர் பரப்பளவு பூமியை கிரையம் பெற்றுள்ளார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. மேலும், தாவா சொத்தானது இந்துசமய அறநிலையதுறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு பாலமலை ரங்கசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற பூமிக்கு க.ச.331/1 காலையை ஒட்டி வடபுறமாக அமைந்துள்ள கிழமேல் மண்ரோட்டிலிருந்து நேரடியாக தெற்குமுகமாக வந்து அவர்களது பூமிக்கு செல்ல முடியுமென்றும், ஆனால், 1ம் எதிர்மனுதாரர் சொத்தினை வாங்கிய பின்னர் அந்த சொத்திற்கு அருகிலுள்ள க.ச.330/1 காலை பூமியான அருள்மிகு பாலமலை ரங்கசாமி கோவிலுனுடைய இடத்தில் கிழமேல் மண்ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி நுழைந்து மேற்காக திரும்பி அவரது பூமியை அடையும் வண்ணம் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். மேலும், அது சம்பந்தமாக மனுதாரர்கள் தடுத்தவுடன் அரசு அதிகாரிகளிடம் பொய்யான தகவலை கூறி கடந்த 10.02.2023 தேதியில் ஓ.மு.0739/2023/அ3 என்ற உத்தரவினை பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வசதியுரிமை சட்டத்தின் படி கோவில் நிலத்தை பயன்படுத்த 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ளது போல் 1ம்எதிர்மனுதாரர் அவர் வாங்கிய சொத்திற்கு க.ச.331/1 காலையை ஒட்டி வடபுறமாக அமைந்துள்ள கிழமேல் மண்ரோட்டிலிருந்து நேரடியாக தெற்குமுகமாக வந்து அவர்களது பூமிக்கு செல்ல முடியுமென்று சொல்லியுள்ளதற்கு முரணாக எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி இரண்டு தடங்கள் வருவாய் ஆவணங்களில் இல்லாத நிலையில் எந்த தடத்தை

பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரர் அவரது பூமிக்கு செல்லமுடியும் என்பது வழக்கின் விசாரணைக்கு பின்னர் தான் தெரியவரும். நீதிமன்ற ஆணையர் சொத்தினை பார்வையிட்டு அறிக்கை அளிக்கும் பட்சத்தில் மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு தடம் ஏற்கனவே உள்ளது என்பது தெரியவராத பட்சத்திலும், தாவா சொத்து மட்டும் 1ம் எதிர்மனுதாரரின் சொத்திற்கு செல்வதற்கு ஒரேபாதை என தெரியவரும் பட்சத்திலும், மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் வழக்கிற்கு தான் பயனுள்ளதாக இருக்கும். தடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளதால் அது குறித்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது. எதிர்மனுதாரர்கள் இந்த மனுவில் சொல்லியுள்ள மற்ற சங்கதிகள் சம்பந்தமாக இந்த மனுவிலேயே முடிவு செய்ய இயலாது. முழுமையான விசாரணைக்கு பின்னர் தான் முடிவுக்கு வர இயலும். எனவே, இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

மனு செலவு தொகையின்றி அனுமதித்து வழக்கறிஞர் திருமதி.கே.ஹேமலதா (M/S No. 7654/2022) அவர்களை நீதிமன்ற ஆணையாளராக நியமித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் ஊதியம் ரூ.10,000/– என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி ஊதியத்தை வரும் 23.03.2026ம் தேதிக்குள் நீதிமன்ற ஆணையாளருக்கு செலுத்தி அதற்கான குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளர் இரு தரப்பினர்களுக்கு முறையாக எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்துவிட்டு மனு சொத்தினையும், 1ம் எதிர்மனுதாரரின் சொத்தினையும் பார்வையிட்டு மேற்படி சொத்துக்களின் இயற்கை அமைப்பை

குறித்து, புகைப்படம் மற்றும் வரைபடத்துடன் அறிக்கை இந்நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளாரின் ஊதியத்திற்க்காக அழைக்க 24.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.03.05 18:25:25 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>பிற்சேர்க்கை :–</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :– இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : – இல்லை

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.03.05 18:25:31 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**